**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 (TamilNadu Information Technology Electronics Service Delivery Rules 2016) விதி-5, துணை விதி(1)-ன் மூலம் கடையநல்லூர் நகராட்சியில் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி, மின்னணு சேவை விநியோக (Electronic Service Delivery System) அமைப்பின் கீழ் https://tnurbanepay.tn.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது.

| **வரிசை எண்.** | **மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர்** | | | **சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி** |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம் Water Charges | (i) | புதிய குடிநீர் இணைப்பு New Water Connection | நகராட்சி ஆணையாளர் |
| | | (ii) | புதிய குடிநீர் இணைப்புக்கான கட்டணம் Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம் Apply for NOC/Clearance | (i) | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம் Application for movie shooting | நகராட்சி ஆணையாளர் |
| | | (ii) | குடிநீர் இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை) NOC for Water Connection (Industrial) | |
| | | (iii) | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம் Payment for Movie Shooting) | |
| | | (iv) | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று NOC for Movie Shooting | |
| 3 | சுகாதார சான்றிதழ் Sanitary Certificate | | சுகாதார சான்றிதழ் Sanitary Certificate | நகராட்சி ஆணையாளர் |
| 4 | கட்டிட அனுமதி Building Plan Approval | (i) | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம் Building Plan Work Progress | நகராட்சி ஆணையாளர் |
| | | (ii) | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணி முன்னேற்ற அறிக்கை Building Plan Work Progress last Story | |
| | | (iii) | வரி மதிப்பிட்டிற்கான நிறைவு அறிக்கை Complete report for Tax Assessment | |
| | | (iv) | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் (Payment for Layout | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | Approval) | |
| | | (v) | மனைப்பிரிவு அங்கீகாதம் கோருதல் (Request for Layout Approval) | |
| | | (vi) | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு (Notice for Commencement of Work) | |
| | | (vii) | கட்டிடம் இடிக்க அனுமதி (Permission for Demolition of Building) | நகராட்சி ஆணையாளர் |
| | | (viii) | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிம கட்டணம் (Planning Permission with Building License) | |
| | | (ix) | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்கு கீழ்) Planning Permission with Building License (Below 12 mts) | |
| | | (x) | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுர அடிக்கு கீழ்) Planning Permission with Building License (Below 1200 Sq.Ft) | |
| | | (xi) | தொழில் வல்லுநர்/டெவலப்பர்களின் பதிவு Registration of Professionals / Developers | |
| | | (xii) | தொழில் வல்லுநர்/ டெவலப்பர்களின் சான்றிதழ் பதிவு Registration of Professionals/Developers Certificate | |
| | | (xiii) | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கோரிக்கை Renewal of Building Plan Request | நகராட்சி ஆணையாளர் |
| | | (xiv) | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கட்டணம் Payment for Renewal Building Plan | |
| | | (xv) | தொழில் வல்லுநர்கள்/ டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு Renewal Registration of Professionals and Developers | |
| | | (xvi) | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை Request for Machinery License | |
| 5 | வர்த்தக உரிமம் | (i) | தொழில் உரிமம் பதிவு – தேடல் Trade License Registration – Search | நகராட்சி ஆணையாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (ii) | தொழில் உரிமம் புதுப்பித்தல் – தேடல் Trade License Renewal - Search | |
| 6 | சொத்துவரி<br>Property Tax | (i) | வரி விதிப்பு முழு விபரம்<br>View Assessment History | நகராட்சி ஆணையாளர் |
| | | | வரி விதிப்பு விவரம் காண<br>View Assessment | |
| 7 | தொழில் வரி<br>Professional Tax | (i) | புதிய தொழில் வரி விதிப்புக்கான கோரிக்கை<br>Request for New Assessment | நகராட்சி ஆணையாளர் |
| | | (ii) | தொழில் வரி விதிப்புக்கான கோரிக்கை மீள சமர்ப்பிப்பு<br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth and Death | (i) | எனது சான்றிதழ்<br>My Certificate | நகராட்சி ஆணையாளர் |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | (i) | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | நகராட்சி ஆணையாளர் |
| | | (ii) | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Payment for Road Cutting | |

**(ந.க.எண். 5927/2021/இ1)**

**தீர்மான எண். 642**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.32454/2021/அம்ருட்–2 நாள்.17.12.2021 15வது நிதிக்குழு (சுகாதார பிரிவு) தேசிய சுகாதார குழுமம் –2021–22 மான்ய நிதி திட்டத்தின் கீழ்** இந்நகராட்சி பகுதி மேலக்கடையநல்லூர் நகர்ப்புற சுகாதார பிரிவு எல்லைகுட்பட்ட பகுதியில் நகர்ப்புற சுகாதார நல மையம் **(U–HWC)** கட்டும் பணிக்கு ரூ. 25.00 லட்சம் மற்றும் கிருஷ்ணாபுரம் நகர்ப்புற சுகாதார பிரிவு எல்கைக்குட்பட்ட பகுதியில் நகர்ப்புற சுகாதார நல மையம் **(U–HWC)** கட்டும் பணி ரூ. 25.00 லட்சம் மொத்தம் 2 எண்ணம் நகர்ப்புறசுகாதார நல மையம் **(U–HWC)** கட்டும் பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்காணும் விபரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி மேலக்கடையநல்லூர் நகர்ப்புற சுகாதார பிரிவு எல்கைக்குட்பட்ட வார்டு எண். 22 இந்திராநகர் புதிய காலனி பகுதியில் நகர்ப்புற சுகாதார நல மையம் **(U–HWC)** கட்டும் பணி | 25.00 |
| 2 | கடையநல்லூர் நகராட்சி கிருஷ்ணாபுரம் நகர்ப்புற சுகாதார பிரிவு எல்கைக்குட்பட்ட வார்டு எண். 01 குமந்தாபுரம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல மையம் **(U–HWC)** கட்டும் பணி | 25.00 |

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5926/2021/இ1)**

**தீர்மான எண். 643**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

**நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆணை ந.க.எண்.19089/2021/E2 நாள்.19.11.2021ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் GAP FILLING INTERST FUND மான்ய நிதி 2021–2022 RETROFITTING CT/PT** my»ன் கீழ் இந்நகராட்சி பகுதிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளவதற்கு ரூ.10,50000/–நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் கீழ்காணும் விபரப்படி உள்ள சமுதாய கழிப்பிடங்களில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி –வார்டு எண்.22 இந்திரா நகர் புதிய குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பணி. | ரூ.5.25/– |
| 2 | கடையநல்லூர் நகராட்சி –வார்டு எண்.22 மங்கம்மா சாலை பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளும் பணி. | ரூ.5.25/– |

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5828 /2021/இ1)**

**தீர்மான எண். 644**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

கடையநல்லூர் நகராட்சி–15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2020–2021ன் கீழ் வாரச்சந்தை வளாகத்தில் குடிநீர் விநியோக மேம்பாட்டுக்காக 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவிலான தரைமட்ட நீர்த் தேக்க தொட்டி **(Ground level sump)** அமைக்கும் பணிக்கு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.4551/2020/இ1 மூலம் திரு.C.வேலுத்துரை ஒப்பந்தக்காரருக்கு 03.06.2021ம் தேதியில் வேலை உத்திரவு வழங்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்காணும் ஒப்பந்தக்காரர் பணியினை ஆரம்பிக்க சென்ற போது வாரச்சந்தை வளாகத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்யும் சாலையோர வியாபாரிகள் ஆட்சேபணை தெரிவித்து சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்குகள் தொடர்ந்துள்ளனர். (வழக்கு எண்கள். WP (MD) NO.14430/2021 முதல் WP (MD) NO.14439/2021 வரை) ஆகவே இப்பணிக்குரிய இடம் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளதால் பணியினை மேலும் காலதாமதமின்றி துவங்கி முடித்திட ஏதுவாக தற்போது மேல்நிலை தொட்டி அமைந்துள்ள பகுதிக்கு மேல்புறம் நீண்ட காலமாக பயனற்ற நிலையிலுள்ள பழுதான கழிப்பறையினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு கிடைக்கப்பெறும் இட அமைப்பிற்கேற்ப அவ்விடத்தில் மதிப்பீட்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட செவ்வக வடிவிலான தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடவும் அதற்கான உரிய வடிவமைப்பினை அரசு பொறியியல் கல்லூரி (அண்ணா பல்கலை கழகம்) திருநெல்வேலியிலிருந்து பெற்று நகராட்சிகளின் மண்டல செயற்பொறியாளர் திருநெல்வேலி அவர்களின் அங்கீகாரத்துடன் மேற்காணும் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க 21.12.2021 அன்று இளநிலை பொறியாளர் அறிக்கை

சமர்ப்பித்துள்ளதால் மேற்காணும் திருத்திய வடிவமைப்பிலான தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டுமான பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

இதனால் எற்படும் கூடுதல் செலவீனத்திற்கும் செலவினத்தை குடிநீர் தலைப்பு நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**(ந.க.எண்.4551/2020/இ1)**

**தீர்மான எண். 645**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்படும் தினசரி சந்தையில் உள்ள 32 கடைகள் கட்டப்பட்டு சுமார் 33 வருடங்களுக்கு மேல் ஆகிறது. இந்நிலையில் அக்கடைகளின் மேற்க்கூரைகள் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் உடனடியாக சீரமைப்பது அவசியமாகிறது. மேலும் மேற்காணும் தினசரி சந்தைக்கடைகளில் வியாபாரம் செய்பவர்கள் மற்றும் சந்தைக்கு வரும் பொது மக்களுக்கும் பெரும் ஆபத்தாக நிலையில் உள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் வடக்குப்பகுதியிலுள்ள கிழமேல் வரிசையில் பழுதடைந்த நிலையிலுள்ள மேற்கூரையினை அகற்றி விட்டு புதிதாக மேற்கூரை (RCC) அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ8.30/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5826/2021/இ1)**

**தீர்மான எண். 646**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்படும் தினசரி சந்தையில் உள்ள 32 கடைகள் கட்டப்பட்டு சுமார் 33 வருடங்களுக்கு மேல் ஆகிறது. இந்நிலையில் அக்கடைகளின் மேற்க்கூரைகள் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் உடனடியாக சீரமைப்பது அவசியமாகிறது. மேலும் மேற்காணும் தினசரி சந்தைக்கடைகளில் வியாபாரம் செய்பவர்கள் மற்றும் சந்தைக்கு வரும் பொது மக்களுக்கும் பெரும் ஆபத்தாக நிலையில் உள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் தெற்குப்பகுதியிலுள்ள கிழமேல் வரிசையில் பழுதடைந்த நிலையிலுள்ள மேற்கூரையினை அகற்றி விட்டு புதிதாக மேற்கூரை (RCC) அமைக்கவும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6.80/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5826/2021/இ1)**

**தீர்மான எண். 647**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

அரசாணை எண்.71 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.09.2021 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித.ந.க.எண்.18698/2021/P2 நாள்.05.10.2021ன்படி நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–2022ன் கீழ் பொதுமக்கள் பங்களிப்புடன் நகராட்சிப் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்க்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதால் இத்திட்டத்தின் கீழ் கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.23 கல்லக நாடியம்மன் கோவில் தெற்கு குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கான மதிப்பீடு ரூ.100000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் பொதுமக்களின் பங்குத்தொகையினை பெற்று மீதத் தொகையினை அரசிடமிருந்து நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–22 நிதியிலிருந்து பெற்றிட ஏதுவாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி கோரிடவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**(ந.க.எண்.4755/2021 /இ1)**

**தீர்மான எண். 648**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

அ) இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.631 நாள்.29.11.2021ன்படி இந்நகராட்சி பேரறிஞர் அண்ணா தினசரி சந்தையில் உள்ள கடைகளுக்கு கடை ஒன்றுக்கு நாள் வாடகையாக ரூ.50/– என்பதை ரூ.75/– ஆக உயர்த்தி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட வாடகை உயர்வு செய்யப்பட்ட விபரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தென்காசி வழியாக 02.12.2021 அன்று தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக்கட்டணம் ரூ.2620/–ஐ கல் பப்ளிக்கேசன்ஸ்(பி) லிமிடேட், திருநெல்வேலிக்கு பட்டியல் எண்.3300316712 நாள்.04.12.2021ன்படி வழங்கவும்,

ஆ) மேற்கண்ட விளம்பரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தென்காசி வழியாக தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக்கட்டணம் ரூ.7520/–ஐ தினத்தந்தி, திருநெல்வேலிக்கு பட்டியல் எண்.2122TVL371004779 நாள்.04.12.2021ன்படி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மான எண். 649**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

கடையநல்லூர் நகராட்சி பேரூந்து நிலையத்திலுள்ள கட்டணக்கழிப்பிடக் குத்தகை 2018–2021 வரை உரிமம் பெற்று நடத்தி வந்த திரு.பழனிக்குமார் S/o,பாலசுப்பிரமணி 7வது வார்டு எம்.ஜி.ஆர் நகர், உசிலம்பட்டி என்பவர் 2020–21ம் ஆண்டில் கொரோனா தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கையாக அரசால் முழுஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காலங்களில் உரிய இழப்பீடு கேட்டு சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை WP(MD)No.1490/2021ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை முதலாம் பிரதிவாதியாகவும், நகராட்சி ஆணையர், கடையநல்லூர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட வழக்கிற்கு எதிர்வாதுரை தாக்கல் செய்ய சென்னை உயர்நீதி மன்ற மதுரைகிளை வழக்கறிஞர் திரு.ராஜராஜன் பிஏ.பி.எல்., அவர்களின் 16.12.2021ம் தேதிய கடிதத்தின்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.550/2021/அ3)**

**தீர்மான எண். 650**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 10**

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.300, நாள்.29.08.2011 மற்றும் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.1399/2013/அ1 நாள்.07.11.2013ன்படி இந்நகராட்சி தந்தை பெரியார் வாரச்சந்தையிலுள்ள 56 கடைகளின் குத்தகை உரிமம் திரு.உ.சேக் அப்துல் காதர், 153 காதர் மைதீன் பள்ளிவாசல் தெரு, பேட்டை, கடையநல்லூர் என்பவருக்கு 30.08.2011 முதல் 31.03.2014 வரை குத்தகைக்குவிடப்பட்டது. இந்நிலையில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.250 நாள்.30.10.2013ன் படியும் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.1399/2013/அ1 நாள்.07.11.2013ன்படியும் அன்னாரின் உரிமம் ரத்து செய்யப்பட்டது.

மேலும் அன்னார் 2013–14ம் ஆண்டிற்கு மேற்கண்ட குத்தகை இனத்திற்கு இவ்வலுவலக ரசீது எண்.1301453 நாள்.05.06.2013ன்படி ரூ.78351/– செலுத்தியுள்ளார். மேலும் குத்தகை ரத்து செய்யப்பட்ட 30.11.2013 வரையிலான காலத்திற்குரிய குத்தகை தொகை 01.04.2013 முதல் 30.11.2013வரை ரூ.52234/–ஐ நீங்கலாக மீதத் தொகை (78351/12 =6530 X 8 =ரூ.52234) ரூ.26117/–ஐ

அன்னாருக்கு திரும்ப வழங்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.260 நாள்.09.08.2017ல் அனுமதி வழங்கியுள்ளது.

மேற்கண்ட தொகை இது நாள் வரையிலும் சம்மந்தப்பட்ட குத்தகைதாரருக்கு வழங்கப்படவில்லை. மேலும் அன்னாரின் 07.02.2020ம் தேதிய மனுவில் தனக்கு வழங்கப்படாத தொகை ரூ.26117/– திரும்ப வழங்க கோரியுள்ளார். மேலும் வைப்புத்தொகை பதிவேட்டில் அன்னார் பெயரில் கணக்கு எண்.3402001ல் ரூ.25000/–ஐ மட்டுமே உள்ளது எனவே திரு.சேக் அப்துல் காதர் என்பவருக்கு ரூ.25000/–ஐ திரும்ப வழங்க அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1991/2017/அ3)**

**தீர்மான எண். 651**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 11**

கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் **(KNMT) 2021–22ன் கீழ்** கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் மயான வளாகத்தில் நவீன எரிவாயு தகன மேடை **(LPG – Crematorium)** அமைக்கும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்களின் வழியாக டைம்ஸ் ஆஃ இந்தியா தமிழ்நாடு மற்றும் முரசொலி தமிழ்நாடு ஆகிய நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதற்கு Enthrall communications (P) LTD என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.66850/–யை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4458 /2021/இ1)**

**தீர்மான எண். 652**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 12**

கடையநல்லூர் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.29045/2019/DO2 நாள்.05.08.2020ன்படி அனுமதி வழங்கியுள்ளதற்கிணங்க ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.261 நாள்.29.10.2020ல் அனுமதி வழங்கியுள்ளதால் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.1240/2020/இ1 நாள்.29.10.2020ன்படி M/S.ஆகாஷ் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ் பிரைவேட் லிமிடெட், திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு 29.10.2020ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனம் பராமரிப்புப்பணிகளை நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் வேலை உத்திரவு காலம் 31.10.2021 அன்று முடிவுறுவதால் தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, அதே நிறுவனம் மூலம் மேலும் ஓராண்டு காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ள இந்நகராட்சி தீர்மான எண்.573 நாள்.13.09.2021ல் அனுமதி பெற்று இவ்வலுவலக கடித ந.க.எண்.1240/2020/இ1 நாள்.15.09.2021 மூலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு இது நாள் வரை கால நீட்டிப்பு உத்திரவு வரப்பெறவில்லையென்பதால் தெருவிளக்குகள் பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்திற்கொண்டும் பொது மக்களின் நலனை கருத்திற் கொண்டும் ஏற்கனவே இந்நகராட்சிப் பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் ஆகாஷ் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட், திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து காலநீட்டிப்பு உத்திரவு வரும் வரை 01.11.2020 முதல் 31.10.2021 வரையிலான காலத்திற்குரிய பழைய விலை விகிதத்திலேயே தொடர்ந்து மேற்கொள்வது குறித்து சம்மத கடிதம் கோரப்பட்டதில் 09.12.2021ம் தேதியில் மேற்படி நிறுவனம் சம்மதகடிதம் வழங்கியுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து கால நீட்டிப்பு அல்லது மறு உத்திரவு வரும் வரை 01.11.2021 முதல் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கும் தொடர்ந்து ஓராண்டிற்கு ஆகாஷ்

இஞ்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் மூலம் தெரு விளக்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவீனத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி கோரப்பப்படுகிறது.

மேற்காணும் பணிகளுக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**(ந.க.எண். 4458 /2021/இ1)**

**தீர்மான எண். 653**

அனுமதிக்கப்பட்டது.

**(ஓம்) S.ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**